# இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

### மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை –26.04.2017

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 44°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 15°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**1. மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். 26.04.17 மற்றும் 27.04.17 ஆகிய தேதிகளில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த இரண்டு நாட்களில் கோடைமழை பெய்ய வாய்ப்புள்ளதால் மானாவாரி மற்றும் இறவை தரிசு நிலங்களில் கோடை உழவு செய்யலாம்.
- ✓ கோடைமழையுடன் சுழல் காற்று வீச அதிக வாய்ப்புள்ளது. எனவே ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும் மற்றும் கரும்பில் விட்டம் கட்டவும்.
- ✓ தற்போதைய வானிலையில் காய்கறி பயிர்களில் சிலந்தி பூச்சித் தாக்குதல் வர வாய்ப்புள்ளது. எனவே அடிக்கடி கண்காணித்து டைக்கோபால் 2.5 மிலி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் கோடைமழையை பயன்படுத்தி உழவு செய்த நிலங்களில் இறவை சோளம் விதைக்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல் நேர வெப்பநிலையானது 39°செ முதல் 41°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28°செமுதல் 30°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 35 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 5 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கோடை நெல் நாற்றங்காலில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 600 மி.லி. /ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிரம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ கோடை நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த குளோரிபைரிப்பாஸ் 2.5 மி.லி. / லி தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ நெல் தரிசு பருத்திக்கு 45-ம் நாள் ஒரு களை எடுத்துவிட்டு 3 நாட்கள் கழித்து உரமிட்டு மண் அணைத்து நீர் பாய்ச்சவும்

- ✓ நெல் தரிசில் பயிரிடப்பட்ட பருத்தி மற்றும் இறவை உளுந்து பயிரில் அசுவினி இலைப்பேன், செம்பேன், தத்துப்பூச்சி மற்றும் வெள்ளை ஈ பரவலான தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த அசாடிராக்டின் 0.03 சதம் (3 மி.லி. / லி) ஒட்டும் திரவத்துடன் கலந்து காலை அல்லது மாலை நேரங்களில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். சேதம் அதிகரிக்கும் போது இமிடாகுளோபிரிட் 20 எஸ்.எல் 40 மி.லி (ஏக்கர்) லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- ✓ இறவை உளுந்து பயிருக்கு விதைத்த மூன்றாம் சாள் பெண்டிமெத்தலின் களைக்கொல்லியை ஏக்கருக்கு 1.3 லிட்டர் என்ற அளவில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும்.
- ✓ கோழிகளுக்கு ராணிக்கட் நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும்.
- ✓ பால் கறக்கும் மாடுகளின் மீது காலை 10 மணி முதலட மாலை 5 மணி வரை 2 மணி நேர இடைவெளியில் தண்ணீரைத் தெளிப்பதனால் பால் உற்பத்தி குறைவது தவிர்க்கப்படுகிறது.

### 3. தெற்கு மண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதமும் காணப்படும். பகல்நேர வெப்பநிலையானது 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 2 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ➢ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் வறண்ட வானிலையில் கத்தரியில் தண்டு மற்றும் காய்த்துளைப்பானின் தாக்குதல் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இதனை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட தண்டுப்பகுதிகளை அகற்றவும். குளோர்பைரிபாஸ் 20% EC 1 மி.லி./ லிட்டர் அல்லது குயினால்பாஸ் 25% EC 1.5 மி.லி./ லிட்டர் என்ற அளவில் 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.
- ➢ தக்காளியில் காய்க்கும் பருவத்தில் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். 12-61- 0 உரம் 1.14 கிலோ/ எக்டர், 13- 0- 45 உரம் 6.17 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 2.8 கிலோ/ எக்டர் என்ற அளவில் பாசன நீருடன் சேர்த்து அளிக்கவும்.

### தெற்கு மண்டலம் -2

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மதுரை, சிவகங்கை, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் வறண்ட வானிலை காணப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 30°செ முதல் 32°செ, மற்ற மாவட்டங்களில் 35°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாவட்டத்தில் மட்டும் 23°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 28°செ முதல் 29°செஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 35 முதல் 75 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 முதல் 10 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேளாண் அறிவுரை

- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் முந்திரியில் தண்டுத் துளைப்பான் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் முக்கிய அறிகுறியாக மரத்தின் அடிப்பகுதியில் சிறு துளைகள் காணப்படும்.இதனைக் கட்டுப்படுத்த தோப்பை சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். தாக்கப்பட்ட மரங்களை அப்புறப்படுத்த வேண்டும். கார்பரில் 50 சதம் நனையும் தூள் 0.1சதம் மருந்தை தண்டுப்பகுதியில் சுமார் 1 மீட்டர் உயரம் வரை தடவிவிட வேண்டும்.
- ✓ தற்போது நிலவிவரும் சூழ்நிலையில் பழ ஈக்களின் தாக்குதல் மாவில் தென்படுகின்றது. பாதிக்கப்பட்ட பழங்களை பறித்து அகற்றி விட வேண்டும் மரத்தைச் சுற்றி உழவு செய்து பழ ஈயின் கூட்டுப்புழுக்களை அழிக்கலாம். பென்தியான் 2 மிலி அல்லது மாலத்தியான் 2 மிலி மருந்தை 1 லி தண்ணீருடன் கலந்து தெளித்தால் பழ ஈக்களை கட்டுப்படுத்தலாம்.

- ✓ பகல் மற்றும் இரவு நேரங்களில் வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் கால் நடைகளுக்கு நாள் ஒன்றுக்கு 80 முதல் 100 லிட்டர் தண்ணீரை 4 வணையாக பகிர்ந்து கொடுக்கவும்.
- ✓ தற்போது நிலவும் பருவநிலையில் மிளகாயில் மஞ்சள் சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதன் தாக்குதலால் செடிகளில் இலைகள் கீழ் நோக்கிச் சுருண்டும், சொரசொரப்பாகவும் இலைக்காம்புகள் நீளமாகவும் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகத்தூள் 6 கிராம் அல்லது எத்தியான் 4 மில்லி ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில் தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.
- ✓ பகல் மற்றும் இரவு நேர வெப்பநிலை தொடர்ந்து உயர்வாக காணப்படுவதால் மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து காய்கறி பயிருக்கு நீர்பாசனம் செய்யவும். தற்போது நிவவும் பருவநிலையில் கொய்யாவில் காய் துளைப்பான் தாக்காமானது தென்படுகின்றது.இதனை கட்டுப்படுத்த தாக்கப்பட்ட பழங்களை எடுத்து அழித்து விடவும் விளக்குப்பொறி 1 எக்டர் வைத்து தாய்ப்பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம். மேலும் மாலத்தியான் 50 இ.சி. 0.1 சதவிதம் மருந்தினை பூக்கும் தருணத்திலும் காய்ப்பிடிக்கும் தருணத்திலும் தெளிக்க வேண்டும்.
- ✓ மிளகாய் செடியில் காய் துளைக்கும் வண்டுகளைக் கட்டுப்படுத்த இனக்கவர்ச்சி பொறிகளைஏக்கருக்கு 5 என்ற அளவில் வைக்கலாம்.

### 4. மலைப்பிரதேச மண்டலம்

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 55 முதல் 65 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 9 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை ஒரு சில இடங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. மண்ணில் ஈரப்பதத்தை பாதுகாக்க, மூடாக்கு இடவும்.
- ✓ நிலவி வரும் அதிக பகல் நேர வெப்பம் காரணமாக, தேயிலை தோட்டத்தில சிவப்பு சிலந்தி தாக்குதல் தென்பட்டால், வேப்பெண்ணை அல்லது ப்ராப்ர்கைட் அல்லது ப்ரபனோபாஸ் அல்லது டைகோபால் 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ அதிக பகல் நேர வெப்பம் காரணமாக, ரோஜா செடியில் செதிள் பூச்சிகளின் தாக்குதல் தென்படுகின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளை மண்ணெனையில் நனைக்கபட்ட பஞ்சை கொண்டு துடைத்து மாலத்தியான் மருந்தை 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ வரும் வாரத்தில் வரக்கூடிய மிதமான மழையை பயன்படுத்தி, உருளை கிழங்கு பயிரில் விதைப்பின் போதும் 30ஆம் நாளிழிமும் ஏக்கருக்கு, 50 கிலோ யூரியா, 266 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ பொட்டாஸ் உரம் இடுவீர்.
- ✓ பெய்துள்ள மற்றும் வரக்கூடிய லேசான மழையை பயன்படுத்தி மேராக்காய் நடவு செய்யலாம். குழிக்கு 3 காய் வீதம், 6 அடி x 8 அடி இடைவெளியில் 45 செமீ கன அளவு குழியில், 10 கிலோ தொழுஉரம், 250 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 500 கிராம் பொட்டஸ் இட்டு நடவு செய்யவும்.

### 5. வடமேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். ஒரு சில இடங்களில் இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 39°செ, இரவுநேர வெப்பநிலை 28°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 43 முதல் 72 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 4 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ அடுத்த மூன்று நாட்களுக்கான வானிலையில் தொடர்ந்து அதிகபட்ச அளவிலேயே கோடையின் தாக்கம் காணப்படும். ஆயினும் நாமக்கல் மற்றும் சுற்றுப்புறங்களில் சில இடங்களில் மிதமான மழை இருக்கக்கூடும்.
- ✓ பகலில் தீவனமிடுவதைத் தவிர்த்து மாலை மற்றும் இரவு நேரங்களில் தீவனமிடுவதும் தீவனத்தில் தாவர எண்ணெயை சேர்த்து கோழிகளுக்குத் தேவையான எரிசக்தியைக் கொடுத்து முட்டை எடையை-அளவை தக்க வைத்துக் கொள்ளவேண்டும்.
- ✓ 30 மற்றும் 60 நாட்களில் வயதுடைய மரவள்ளிக்கு இலைவழியாக 1% இரும்பு சல்பேட் மற்றும் 0.5% துத்தநாக சல்பேட் கரைசலை கட்டாயம் தெளிக்க வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலை காணப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 37°செ முதல் 44°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 28°செ முதல் 30°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
- ✓ கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை உயர்த்தி வைப்பதால் வெப்பதாக்கத்தை குறைக்கலாம். மேலும் குடிநீரில் தாது உப்புகள் மற்றும் B-காம்ளக்ஸ் வைட்டமின் கலப்பதால் வெப்ப அகழ்ச்சியிலிருந்து பாதுகாக்கலாம்.
- ✓ வெயில் அதிகமான பகல் நேரங்களில் கறவை மாடுகளின் மேல் தண்ணீர் தெளித்து அதன் வெப்பத்தை தனிப்பதன் மூலம் பால் உற்பத்தி குறையாமல் பாதுகாக்கலாம்.
- ✓ பியுடாக்ஸ் என்ற மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீரில் 2-3 மில்லி என்ற அளவில் கலந்து ஆடுகளின் மேல் புறம் தடவுவதன் மூலம் புறஒட்டுண்ணிகளை நீக்கலாம்.
- ✓ கத்தரி பயிரைத் தாக்கும் குருத்து மற்றும் காய்த்துளைப்பானைக் கட்டுப்படுத்த ஹெக்டருக்கு எமாமெக்டன் பென்ஜொவேட் 5 SG 200 கிராம் என்ற அளவில் பயன்படுத்திக் கட்டுப்படுத்தவும்

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலை காணப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 27°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 65 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 10 -15கி.மீ. வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் குலை தள்ளிய வாழைகளுக்கு முட்டு கொடுத்தல் நல்லது.
- ✓ அன்னாசி மற்றும் சாமந்தி : போதுமான அளவு மழை இல்லாததால் செடிகளுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ மிளகு : கடந்த 2 வருடங்களாக சுண்ணாம்பு இடும் பணி மேற்கொள்ளவில்லையெனில், முதல் கோடை மழை கிடைத்த உடன் கொடிக்கு 500 கிராம் சுண்ணாம்பு என்ற அளவில் இட வேண்டும்.
- ✓ மரப்பயிர்களுக்கு பாத்திகள் அமைத்து மக்கிய தென்னைநார் கழிவுகளை இடுவதன் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாக்கலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம்,கோவை**